| | | |
|---|---|---|
| சாட்சி : PW 3<br>கார்த்திகேயன் | அ.வ.எண். 120/2017 | 05.04.2024 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) புலஎண்.224/1F3 அர்ஜீனன் பெயரில் உள்ளது என்றால் ஓட்டுவீடு என்று தான் உள்ளது அது அர்ஜீனன் பெயரில் இல்லை. புலஎண்.224/1F2 என்னவாக உள்ளது என்றால் என்னிடம் இருக்கும் ஆவணத்தில் புலஎண்.224/1F2 இல்லை. சா.சா.ஆ.2 புல வரைபடத்தில் புலஎண்.224/1F2 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 புலஎண்.224/1F2 உட்பிரிவு செய்யப்பட்ட போது அதை பொறுத்து அடங்கலிலும் குறிப்பு இருக்க வேண்டும் என்றால் சரிதான். தாலுக்கா அலுவலகத்தில் இருக்கும் அடங்கல் தான் சட்டப்படியாக அடங்கல் பதிவேடு என்றால் சரிதான். எனது முதல் விசாரணையின் போது தாலுக்கா அலுவலகத்தில் இருந்து சட்டப்படியான அடங்கல் பதிவேடு வாங்கி வராததற்கு எந்த தனிப்பட்ட காரணமும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக உட்பிரிவு செய்யும் போது வரிசையாக தான் எண்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் புலஎண்.224/1F2 இருந்தால் தான் புலஎண்.224/1F3 வரும் என்றாலும் சரிதான். என்னிடம் உள்ள அடங்கல் பதிவேட்டில் (சா.சா.ஆ.1) புலஎண்.224/1F1 மற்றும் புலஎண்.224/1F2 என்ற பக்கமே இல்லை என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது புலஎண்.224/1F2 யை பொறுத்த ஆவணத்தை எடுத்து வரவேண்டும் என்றால் சரிதான், அந்த ஆவணத்தை நான் கொண்டு வரவில்லை என்றால் சரிதான். என்னால் எப்போது அந்த ஆவணத்தை நீதிமன்றத்திற்கு கொண்டுவரமுடியும் என்றால் எங்களது அலுவலகத்தில் வேறு எந்த பதிவேடும் இல்லை. சா.சா.ஆ.2 ஆவணத்தில் புலஎண்.224/1F1 மற்றும் புலஎண்.224/1F2 உள்ளது அதை பொறுத்து

அடங்கல் கணக்கை நான் எப்போது தேடி எடுத்து கொடுப்பேன் என்றால் எங்கள் அலுவலகத்தில் வேறு எந்த ஆவணமும் இல்லை. சர்வே எண்.224/1E1 மற்றும் சர்வே எண்.224/1E2 தற்போது தேசிய நெடுஞ்சாலையாகவும் சர்வீஸ் ரோடாகவும் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.224/1E1 ற்கு கீழ்புறம் தான் சர்வே எண்.224/1E2 உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.224/1G1 சர்வீஸ் ரோடாக உள்ளது என்றால் சரிதான். புலஎண்.224/1F1 மற்றும் புலஎண்.224/1F2 பொறுத்த பதிவேடுகள் நத்தம் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் எப்போது வரைபடம் தயாரிக்கப்பட்டதோ அப்போதில் இருந்து உள்ளது என்றால் சரிதான். புலஎண்.224/1F1 மற்றும் புலஎண்.224/1F2 யை பொறுத்த அடங்கல் பதிவேடுகளை எப்போது என்னால் தேடி எடுத்து வர முடியும் என்றால் Election முடிந்த பிறகு எடுத்து வரமுடியும்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 26.04.2024 அன்று ஒத்திவைக்கப்படுகிறது)